[1993 மார்ச் 23

வினா எண் 151, திரும க. பஞ்சவர்ணம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

முற்பகல் 10-30

151—

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் மின் விளக்கு பிரச்சினைகளைத் தீர்த்தல்

*10292—திருமதி கே. பஞ்சவர்ணம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் இரண்டு மின் சார வாரியத்துறைப் பணியாளர்களை நிரந்தரமாக நியமித்து ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடையும் அல்லது புதிதாக போடப்படும் மின் விளக்கு பிரச்சினைகளை தீர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் இரண்டு மின் சார வாரியத்துறை பணியாளர்களை நிரந்தரமாக நியமித்து ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடையும் அல்லது புதிதாக போடப்படும் மின் விளக்கு பிரச்சினைகளைத் தீர்க்கும் திட்டம் தற்போது எதுவும் இல்லை.

திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைப்பட்ட காலங்களில் இருண்ட தமிழகத்தை ஒளிமயமாக்கும் எங்களுடைய ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்களுடைய புனித பொற்கால ஆட்சியில் மின்னொளி இல்லாத கிராமங்களே இல்லையென்ற நிலையை உண்டாக்கும் வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திற்கும் நாம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலே மின் விளக்கு போட வேண்டுமென்று சொல்லி, கிராமங்கள் வாரியாக நாம் திட்டங்களை உருவாக்கி அனுப்பினாலும், அதை முழுமையாகப் போடுவதற்கு அங்கே மின் துறை

1993 மார்ச் 23]

ஊழியர்கள் இல்லாத காரணத்தால், மின்சார வாரியத்திலிருந்தே ஊழியர்களை கூப்பிட வேண்டியிருக்கிறது. அது பழுதடைந்த கிராமங்களிலே முழுமையாகப் போட முடியவில்லை. அல்லது பயிற்சி பெற்ற ஊழியர்களை பிரைவேட்டாக போட்டால்கூட, அந்த இ.பி.-இல் இருக்கக்கூடியவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, நமக்கு இருக்கக்கூடிய வளமான, ஒரு முழுமையான நிறைவேறாதத் திட்டம் என்கிறபோது, அந்த வகையில், கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. எங்கு சென்றாலும் லைட் போடுவதற்கு ஆள் இல்லையென்று சொல்லி, ஆங்காங்கே இருக்கக்கூடிய ஊராட்சியினுடைய அலுவலர்கள் சொல்கிறார்கள். இந்த நிலையைப் போக்கக்கூடிய வகையில் அரசு மறுபரிசீலினை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, நடைமுறையிலுள்ள ஆணையின்படி 1—7—1986 முதல் ஊராட்சி மற்றும் நகராட்சி பஞ்சாயத்திலுள்ள தெருவிளக்குகளை உள்ளாட்சி அமைப்புகள் பராமரித்து வருகின்றன. இந்த ஆணையின்படி மின்சார வாரிய வொயர் மென் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒவ்வொரு பஞ்சாயத்திலுள்ள, எல்லையிலுள்ள தெரு விளக்குகளைப் பராமரிக்க வேண்டும். அவர் வருகின்ற விவரம் முன் கூட்டியே அந்தப் பஞ்சாயத்துக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அந்தப் பஞ்சாயத்திலே தலைவர் இருந்தால் அந்தத் தலைவர் எரியாத விளக்குகளுக்கு உதிரிப் பாகங்களை அந்த வொயர் மென் இடத்திலே தருவார். இல்லாவிட்டால் அந்தப் பஞ்சாயத்துப் பொறுப்பை கவனித்துக் கொண்டிருக்கிற அலுவலர்கள் உதிரி பாகங்களை வொயர் மென் இடததிலே தருகின்றனர். வொயர் மென் தெரு விளக்குகளை பழுது பார்த்ததற்குப் பின்னாலே உதிரி பாகங்களை அந்தப் பஞ்சாயத்துத் தலைவரிடமோ அல்லது அலுவலரிடமோ கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மின்சார வாரிய ஊழியர்களுக்கு தற்போது 1—4—1992 முதல் தெருவிளக்குகளைப் பராமரிப்பதற்காக ஒரு ஊக்கத் தொகையாக ரூ. 2 வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் சில கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மின் விளக்குகளை கொடுக்கின்ற போது அதைப் பொறுத்துகின்ற பணியினை மின்சார வாரியம் செய்கின்ற இரட்டை நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. மின்சார வாரியத்தைப் பொறுத்த மட்டிலே ஆட்குறைப்பு என்பது, இன்றைக்கு இருக்கின்ற நிலைமை அவர்களுக்குத் தெரியும், ஆட்களை நாங்கள் குறைக்கவில்லை. ஏற்கெனவே இருப்பவர்களை வைத்து இன்றைக்கு பணிகளை செய்து கொண்டிருக்கிறோம். புதியதாக பணியாளர்களை நியமிப்பதற்கு தற்போது பல்வேறு பிரச்சினைகள் காலிஃப் கமிஷன் போன்ற

வைகள் எல்லாம் 24 ஆயிரம் பேர்களை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கின்ற நிதியாதாரங்களின்படி கடுமையான நஷ்டத்திலே மின்சார வாரியம் இலவச மின்சாரம் வழங்குகின்ற காரணத்தினாலே இருக்கிறது. எனவே, புதிய ஊழியர்களை தேர்வு செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். ஏற்கெனவே இருக்கின்ற வொயர் மென்களை வைத்துக் கொண்டு ஒரு புதியத் திட்டத்தை நடை முறைப் படுத்தியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த கண்காணிப்புப் பொறியாளரை ஒவ்வொரு மாதமும், இரண்டு பேரும், சந்தித்து ஊராட்சி ஒன்றியங்களிலே எந்த ஊராட்சி ஆணையாளர் புகார் செய்தாலும், சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர், மின்சார வாரிய எஸ்.இ. அவர்கள் எந்தப் பகுதியிலே வொயர் மென் விளக்குகளை சரியாகப் பொறுத்தவில்லையென்று எந்த ஊராட்சியினுடைய ஆணையாளர் புகார் செய்திருக்கிறாரோ அந்த வொயர் மென் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஒரு புதிய முறையை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம். நானும், உள்ளாட்சித் துறை அமைச்சரும் சேர்ந்து பேசி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற கண்காணிப்புப் பொறியாளர்களுக்கும் புதியதாக ஒரு உத்திரவினை வழங்கியிருக்கிறோம். அதாவது அரசு ரீதியாக ஜீ.ஓ. போடவில்லை. நேரிடையாக அழைத்துப் பேசி அந்தக் கூட்டத்திலே எல்லா மேற்பார்வைப் பொறியாளர்களையும் தமிழ்நாடு முழுவதும், அழைத்துப் பேசி இந்த மாதிரிப் பிரச்சினைகள், பல்வேறு புகார்கள் வருகின்றன, ஊராட்சியிலிருந்து விளக்குகளைக் கொடுக்கின்ற நேரத்திலே மின்சார ஊழியர்கள் மாற்றவில்லையென்று சொல்கிறார்கள். சில நேரங்களிலே கேட்கின்ற போது அவர்கள் பல்புகளை வாங்கிக் கொடுப்பதில்லை, அதனால் நாங்கள் மாற்றுவதில்லையென்று சொல்கிறார்கள். இதில் யார் மீது குறை இருக்கிறது என்று நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தால், அரசுக்கு கெட்ட பெயர் வருகிறது. ஆகவே, இரண்டு அமைப்புகளை சேர்ந்தவர்களுக்கும் கோஆர்டினேஷன் கமிட்டி போல, மேற்பார்வைப் பொறியாளர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும், மாதம் ஒரு முறை சந்திக்க வேண்டும். எந்த ஒன்றியத்தினுடைய ஆணையாளர் விளக்குகளை வாங்கிக் கொடுக்கவில்லையோ அதைக் கண்காணிப்பாளர் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தெரிவிக்க வேண்டும். அப்படி ஏதாவது புகார் வந்தால், அப்படித் தெரிவிக்கின்ற போது அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிற இன்ஸ்ட்ரக்ஷன். அதன்படி இப்போது கோ ஆர்டினேஷன் செய்து நடை முறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். புதியவர்களை நியமனம் செய்வதைப் பொறுத்தவரையில் நிதியாதாரத்தை மேம்பாடு செய்தவுடன் அதற்கான பரிசீலனையை நாம் செய்கிறோம். அதிலே பல்வேறு சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன. வழக்கு மன்றத்தில் பிரச்சினைகள் இருக்கின்றன.

1993 மார்ச் 23]

மின்சார வாரியத்தில் கொஞ்சம் ஊழியர்கள் பற்றாக் குறை இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இல்லை என்று சொல்ல முடியாது. எனினும் இருக்கிற பிரச்சினைகளை எல்லாம் சீர் செய்வதற்கு சில நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். அவை எல்லாம் இன்னும் இரண்டு, மூன்று மாத காலத்திலே தீர்க்கப்படும். இப்போது இருக்கிறவர்களை வைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இப்படிப்பட்ட நடைமுறைகளை உருவாக்கி இருக்கிறோம். அது போன்ற புகார்கள் எந்தப் பகுதியிலேயிருந்தாவது வருமேயானால் என்னுடைய கவனத்திற்கோ அல்லது உள்ளாட்சித்துறை அமைச்சருடைய கவனத்திற்கோ கொண்டு வந்தால் அந்த முறையிலே தவறு இருந்தால் உடனடியாகத் திருத்தியமைக்கப் படும், ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.35

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> இவ்வளவு தெளிவான விளக்கத்திற்குப் பின்னரும் கேள்வி தேவையா ?

<u>திருமதி கே. பஞ்சவர்ணம்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி மாவட்ட ஆட்சித்தலைவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மின்சார வாரியத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி ஒரு குழு நியமித்ததற்காக நன்றி. அதே நேரத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 40, 50-க்கு மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் இப்படிப்பட்ட பிரச்சினை ஒரு மாதத்திற்கு இரண்டுமுறை மூன்றுமுறை வந்து விடுகிறது. எனவே இப்போது முழுமையாக, நிரந்தரமாக அரசுப் பணியாளர்களை நியமிக்காவிட்டாலும்கூட, அதிலே பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள், என்.எம்.ஆர்.-ஆக ஆக, தினசரி சம்பளம் கொடுக்கப்படக் கூடியவர்களாக ஊராட்சி ஒன்றியத்திலே இரண்டு பேரை நியமித்து அவர்களைப் பணிபுரிய வைக்கலாம் என்ற கருத்தை நான் சொல்கிறேன். . ஏனென்றால் திடீரென்று .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : கேள்வியாகக் கேளுங்கள்.

<u>திருமதி கே. பஞ்சவர்ணம்:</u> தினசரியாக, லைட் எரியவில்லை என்று சொல்லி ஆங்காங்கே இருக்கக் கூடிய ஊராட்சி மன்றங்களுக்கு உள்ளிட்டவர்களை லைட் போடுவதற்குக் கூப்பிட்டால் அதாவது பயிற்சி பெற்றவர்களைக் கூப்பிட்டால் இ.பி. யில் இருந்து தகராறுக்கு வருகிறார்கள். அதனால் ஊராட்சி

[1993 மார்ச் 23

ஒன்றியத்திலே பணிபுரியக்கூடிய வகையில் பயிற்சி பெற்றவர்களுக்காவது வேலை கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இது சம்பந்தமாக கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் ரெகுலர் பி.டீ.ஓ.க்களாக இருக்கக்கூடியவர்கள்தான், இந்த பாகங்களை வாங்கிக்கொடுக்கின்ற பொறுப்புக்களை ஏற்று இருக்கிறார்கள். இப்போது நடைமுறையில் இருக்கிற பிரச்சினையை அரசு நன்றாக அறியும். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய பிரச்சினைகளையும், யோசனைகளையும் நாங்கள் வந்தவுடன் பார்த்தோம். இரண்டு நிர்வாகங்கள் நடக்கிறபோது ஒன்றுக்கொன்று கோஆர்டினேஷன் இல்லாவிட்டால் கிராமப் பகுதிகளில் ஒத்துழைப்பு இருக்காது என்பது எங்களைப் போன்ற கிராமப் பகுதியிலே இருந்து அமைச்சர்களாக வந்திருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் எங்களுடைய ஊர்களும் குக்கிராமங்கள்தான். ஆகவே லைட் போடுகிறபோது பிரச்சினைகள் ஏற்படுவதை நாங்கள் நன்றாக அறிவோம். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் நன்றாக அறிவார்கள். எனவே நாங்கள் இருவரும் கலந்து பேசி இப்போது ஒரு புதிய முறையைக் கொண்டு வருவதற்கு சாத்தியம் இல்லாத காரணத்தால்தான் இருக்கிற முறையை வைத்துக்கொண்டு எப்படி சீராக நடத்த முடியும் என்பதற்காக சில யோசனைகளை செய்து இந்த கோ-ஆர்டினேஷன் கமிட்டி என்று சொல்லப்படும் குழுவை நாங்கள் அமைத்திருக்கிறோம். இதிலே ஏற்கெனவே நான் சொன்னதுபோல் 24,000 பேர்களை வேலைக்கு எடுக்கவேண்டி இருக்கிறது. அதில் பிரச்சினைகள் இருக்கின்றன. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். என்.எம்.ஆர். பிரச்சினை, காலிஃப் கமிஷன் பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அதற்கான நிதி வசதி இல்லை. ஆகவே புதிதாக நியமிக்கப்படக்கூடியவர்களுக்கு யார் சம்பளம் கொடுப்பது என்ற பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே நாங்கள் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டிய ஒரு பிரச்சினை இது. உடனடியாக இன்றைக்கு சட்டமன்றத்திலே நான் தெரிவிப்பதற்கான வாய்ப்பு இல்லை. ஆகவே இது சம்பந்தமாக எங்களுக்கு பெரிய பிரச்சினை இருக்கிறது. இதை எப்படியாவது தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறோம். இந்தப் பிரச்சினைகள் அரசின் முழுமையான கவனத்திற்கு வந்திருக்கிறது. உறுப்பினர் அவர்களைப் போல் நாங்களும் நன்றாக அறிந்திருக்கிறோம். ஆகவே இது சம்பந்தமான உங்களுடைய யோசனை ஏற்றுக்கொள்ளப்படும். எனினும் நடைமுறையில் இம்மாதிரி பிரச்சினைகள் இருக்கின்றன. அதைத்தான் நான் சொல்லி

1993 மார்ச் 23]

யிருக்கிறேன். கலெக்டர் பி.டீ.ஓ. இடத்திலே சொல்லவேண்டும், சட்டமன்ற உறுப்பினர் சொன்னால் உடனடியாக கலெக்டரும், சூப்பிரன்டென்டிங் இன்ஜினியரும் நடவடிக்கை எடுப்பார்கள். இன்ன பகுதியிலே லைட் மாற்றப்படவில்லை என்று சட்ட மன்ற உறுப்பினரோ அல்லது பொறுப்பில் உள்ளவர்களோ தெரிவிக்கிற போது, உடனடியாக ஒன்றிய ஆணையாளர், கலெக்டர், மேற்பார்வைப் பொறியாளர், அங்கே இருக்கிற ஏ.டீ., ஏ.இ., போன்றவர்கள் லைன் மேன்களை அழைத்து உடனடியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். குறிப்பாக அந்த மாதிரி புகார் வந்தால் என்னிடத்தில் அல்லது உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்தில் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உங்களுடைய நல்ல யோசனை இந்தப் பிரச்சினை வராமல் தடுத்தால் கிராமத்தில் நல்ல பெயர் வரும் என்பதுதான் என்பதை நாங்கள் நன்றாக அறிவோம். எனினும் இதிலே ஒரு தீர்க்கமான முடிவெடுக்க அரசுக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டியிருக்கிறது. இருக்கின்ற நடைமுறைகளைச் சீராக்குவதற்கு உரியவகையில் நடவடிக்கை எடுத்து செயல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர், சிங்காரம்

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராமங்கள்தோறும் தெருவிளக்குகள் எரியவில்லை என்ற புகார் மேலோங்கி இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அதேநேரத்தில் சென்ற ஆண்டு இதே சட்டமன்றப் பேரவையில் தெரு விளக்குகள் எரியவில்லை என்று நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 3 கோடி ரூபாயை நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று வழங்கினார்கள். அந்தத் தெரு விளக்குகள் யாவும் போடப்பட்டன. அங்கே மின்சாரத் துறை ஊழியரை வைத்துத்தான் அந்த லைட் போடவேண்டும். ஆனால் மின்சாரத் துறை ஊழியர்களை, அந்த டிப்பார்ட் மெண்டிலே இருந்துதான் வரவழைக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கேள்வியாகக் கேட்கவேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடிப்படையாக இருக்கின்ற கஷ்டங்களைத் தான் எடுத்துச் சொல்கிறேன். இன்று இருக்கின்ற பிரச்சினையே இது தான்.

[1993 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்டால் தான், இன்றைக்கு 20 கேள்விகள் எடுக்கமுடியும்.

திரு. ஆர். சிங்காரம் : நான் சொல்கிறேன். அடிப்படையிலே ரூ. 2 கொடுக்கலாம் என்று அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் வாடகைக்குப் பிடிக்கின்ற அந்த லைன்மேன் வந்து செய்தால் 7 ரூபாய், 10 ரூபாய் என்று கேட்கிறார்கள். அதை யார் கொடுப்பது ? ஊராட்சியிலே ஊராட்சி எழுத்தராக இருப்பவர் சரியாகப் பணிபுரிவதில்லை. கிராம நல ஊழியர்கள் அதைக் கவனிப்பதில்லை. ஆகவே நீங்கள் அரசின் மூலமாக கோடி கோடி ரூபாயாக வாரி வழங்கி இந்தத் தெருவிளக்குகளைப் போடுங்கள், போடுங்கள் என்று அரசு தெரிவித்தும்கூட அது நடைமுறைக்கு வரவில்லை. எனவே, ஊராட்சி ஒன்றியத்திலே 2 பேரை அல்லது 4 பேரை நியமிக்க வேண்டும். அந்த ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து, நிதி இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு அவர்களே வழங்கிக் கொள்ளலாம் என்றும், நிதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு வழங்கலாம் என்ற முடிவை எடுத்தால்கூட ஓரளவுக்குத் திருப்திகரமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் விரிவாகப் போய்க் கொண்டே இருக்கக்கூடாது. கேள்வியாகக் கேளுங்கள். இப்போது நீங்கள் சொல்வதெல்லாம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசவேண்டிய விஷயம்தான் இது. ஆகவே, இது மிகப் பெரிய முக்கியமான விஷயம். ஆகவே, இந்த அரசு கோடிக்கணக்கான ரூபாயை வழங்குகிறது, தெருவிளக்குப் போடவேண்டுமென்று. ஆனால் நடைமுறையிலே தெருவிளக்கு போடுவதில்லை. போட்டால் கூட சரிவர எரிவதில்லை. காரணம், லைன்மேன் இல்லாத காரணத்தினால். அதைத்தான் சொல்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் உடனடியாக இந்த இரண்டு அமைச்சர்களும் கலந்து பேசி ஒரு தீர்க்கமான, தீவிரமான உடனடி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இருவரும் கலந்து பேசியதைப் பற்றித்தான் சட்டமன்றத்திலே தெரிவித்துக் கொண்டிருந்தேன். மீண்டும் திரு. சிங்காரம் அவர்கள் திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த பிரச்சினை வந்தபோது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின் பேரில் நானும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிப்புப்

1993 மார்ச் 23]

பொறியாளரோடு ஒரு கோ-ஆர்டினேஷன் கமிட்டி போட்டு அதற்குப் பின்னாலே அங்கே இருக்கிற ஏ.டி.ஈ. எலக்ட்ரிசிடி போர்டு அல்லது பி.டீ.ஓ. இருவரும் சேர்ந்து, அந்த பகுதியிலே விளக்குகள் எரியவில்லை என்று புகார் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். நான் விரிவாகத் திருப்பித் திருப்பி சொல்ல விரும்பவில்லை. ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதிலே உள்ள பிரச்சினைகள் ஒயர்மேன்கள் நியமிப்பது சம்பந்தமாக சொன்னார்கள். ஆட்கள் இல்லை என்று கிடையாது. ஒன்றிரண்டு இடங்களிலே வேண்டுமானால் பற்றாக்குறை இருக்கலாம். அதற்காக பல்வேறு நடவடிக்கைகள் இன்றைக்கு மின்சார வாரியம் எடுத்து இருக்கிறது. ஆட்களை நியமிப்பதிலே காலிஃப் கமிஷன் போன்ற பிரச்சினைகள் பற்றி நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். ஆகவே அதிலே இருக்கின்ற குறைபாடுகளை தீர்ப்பதற்காகத்தான் அதற்கான நடவடிக்கையிலே இறங்கியிருக்கிறோம். இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏறத்தாழ ஒன்றேமுக்கால் லட்சம் லைட்டுகளை, புதிய மின் விளக்குகளை போடுவதற்கு உத்தரவை வழங்கி எக்ஸ்டென்சன் லைட்ஸ் போடுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அது எல்லாம் இந்த மூன்று மாத காலத்திலே முடிக்கப்பட்டுவிடும். நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பின்னாலேதான் பல கோடி ரூபாய்களை ஒதுக்கி, இன்றைக்கு தெருவிளக்குகளை தந்திருக்கிறார்கள். ஒரு பெரிய நிர்வாகத்தை நடத்துகின்றபோது, பல்வேறு கிராமங்களிலே மின்விளக்குகளைப் போடுகின்றபோது ஒன்றிரண்டு குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். ஏற்கனவே இருந்த நடைமுறையிலே இருந்த குறைபாடுகளை நாங்கள் வந்ததற்குப் பின்னாலே முழுவதுமாக தீர்ப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். சிற்சில குறைபாடுகள் இருக்கிறபோது எடுத்துச் சொல்லுங்கள். கோ ஆர்டினேசன் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. கலெக்டர்களும் கண்காணிப்புப் பொறியாளரும், அதே போல பீ.டீ.ஓ.வும், ஏ.டீ.ஈ.-யும் போட்டிருக்கிறார்கள். மின்சாரத் துறையிலே இருக்கின்ற ஊழியர்கள் மீது, இதிலே புகார் இருந்தால், என்னிடத்திலே சொல்லலாம் அல்லது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லலாம். பி.டீ.ஓ.-க்களை பற்றி புகார் வந்தால் சொல்லலாம். இதிலே இந்த அரசு நான் ஏற்கனவே சொன்னதைப் போல, என்னைப் போன்றவர்கள் அவரைப் போன்றவர்கள் எல்லாம் கிராமத்திலே இருந்துதான் அமைச்சர்களாக வந்து இருக்கிற காரணத்தினால் முழுமையாக இதிலே இருக்கின்ற விஷயங்கள் தெரியும். ஆகவே இதை தீர்க்க வேண்டும் என்று நாங்கள் முடிவெடுத்து இருக்கிறோம். சில அடிப்படை பிரச்சினைகளிலே, சில பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் களையதான் இப்படி கமிட்டி போட்டிருக்கிறோம். போன அரசாங்கத்திலே இந்த பிரச்சினையிலே கமிட்டி எல்லாம் போடவில்லை. நடவடிக்கை எடுக்க

வில்லை என்று யாரும் சொல்ல முடியாது. நடவடிக்கை எடுத்து, அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சிற்சில குறைபாடுகள் வருகின்றபோது இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது தீர்க்கப்படும். உங்களுடைய யோசனைகளும் மேற்கொள்ளப்படும். அது எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 152, திரு. மு. வெங்கடராம ரெட்டி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

152—

தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

*9966—திரு. மு. வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியை ஊராட்சி ஒன்றியமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியை ஊராட்சி ஒன்றியமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. மேலும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெறுவதால் மார்ச் 1993 வரை உள்ளாட்சி நிறுவனங்களில் எந்தவித நிர்வாக மாறுதல்களும் செய்தல் கூடாது என அரசின் தடையாணை அமுலில் உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

Thiru M. VENKATARAMA REDDY: Hon. Speaker, Sir, the Thali Panchayat Union is one of the biggest Panchayat Unions in Tamil Nadu. It consists of 50 Panchayats and its area is more than 100 miles in length and 50 miles in breadth. It consists mostly of hilly and forest area where the tribal population is predominant. Though it consists of 50 Panchayats, the grants given to it are the same as those given to a Panchayat Union with 20 Panchayats. In these circum-